DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.

Case No.STC 312/2024

Prosecution witness – PW.1

| | | |
|---|---|---|
| Name | :திருமதி.இந்திரா | Caste: |
| Husband's Name | :முத்துச்சாமி | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |

09.06.2025 – 11.25 AM

எதிரி ஆஜர் இல்லை. எதிரிக்காக மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>முதல் விசாரணை</u>:–

1. நான் பாம்புல்நாயக்கன்பட்டியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். சுமார் ஓராண்டுக்கு முன்பு நான் வயலில் வேலை செய்து கொண்டிருந்தேன். நான் வேலை பார்த்துக்கொண்டிருந்த வயலுக்கு அருகில் செல்லும் சாலையில் சென்று கொண்டிருந்த போலீசார் ஒருவர் எனது கணவர் முத்துச்சாமியும் எனது மூத்த மகன் அபீஷ் ஆகியோரும் மாலை 04.30 மணியளவில் கமுதியிலிருந்து எங்கள் ஊரைச் சேர்ந்த முருகன் என்பவரது ஆட்டோவில் ஊருக்கு வந்து கொண்டிருந்தபோது வேப்பங்குளம் செல்லும் சாலையின் பிரிவில் வந்து கொண்டிருந்தபோது முருகன் மது போதையில் ஆட்டோவை ஓட்டி வந்து வேகத்தடையில் ஏறி இறங்கும்போது எனது கணவரும் எனது மகனும் கீழே விழுந்து காயம்பட்டதாக சொன்னார்கள்.

2. காயம்பட்ட இருவரும் கமுதி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருப்பதாகவும் தகவல் சொன்னார்கள். நான் உடனடியாக கமுதி அரசு மருத்துவமனை சென்று இருவரையும் பார்த்தேன். எனது கணவர் மயக்க நிலையில் சிகிச்சையில் இருந்தார். எனது கணவருக்கு

இடது காலில் காயம்பட்டிருந்தது. எனது மகனும் பதற்றத்தில் சரியாக என்னிடம் நடந்த சம்பவத்தை குறித்து கூறவில்லை. எனது மகனுக்கு இடது கை, இடது காலில் காயம்பட்டிருந்தது. அதனால் நான் அவரை என்ன நடந்தது என்று கேட்டு வற்புறுத்தவில்லை. பின்னிட்டு மறுநாள் எனது மகன் என்னிடம் என்ன நடந்தது என்று கூறினார்.

3. பின்னர் எனது மகனுக்கு ஏற்பட்ட காயம் பெரிய காயம் என்பதால் மேல்சிகிச்சைக்காக மதுரை ப்ரீத்தி தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தோம். நான் எனது மகனுடன் மதுரை ப்ரீத்தி மருத்துவமனையில் இருந்தபோது போலீசார் விசாரித்தார்கள். நான் நடந்த சங்கதிகளை போலீசாரிடம் கூற அவைகளை போலீசார் எழுதிக் கொண்டார்கள். நான் கையொப்பம் மட்டும் செய்து கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. எனது மகனுக்கு ப்ரீத்தி மருத்துவமனையில் இடது கையிலும் இடது காலிலும் அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. சுமார் 1 மாத காலம் எனது மகன் மருத்துவமனையில் உள்நோயாளியாக தங்கி சிகிச்சை பெற்றார். எனது கணவருக்கு கமுதி அரசு மருத்துவமனையில் 4 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை அளிக்கப்பட்டது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

(ஒம்/–திருமதி.G.தங்ககார்த்திகா)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.